# கொழும்புப் பல்கலைக் கழகம், இலங்கை
## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை - ஆண்டு III, 2017
## சான்று மற்றும் நடபடிமுறைச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப் படும்)

---

1. இவ்வினாவில் பின்வரும் பகுதிகளில் ஒன்றிற்கு விடையளிக்க:

(i) "1997ம் ஆண்டின் 30ம் இலக்க பிணைச் சட்டம் சந்தேக நபர்களுக்கும் இந்நாட்டின் குற்றவியல் நீதி நிர்வாகத்திற்கும் நன்மை பயக்கத்தக்க பல அனுகூலமான தனிச்சிறப்புக்களைக் கொண்டுள்ள போதிலும் சில பிரிவுகள் சட்டத்தின் வழிகாட்டும் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படுவது போலுள்ளது".

நீர் உடன்படுகின்றீரா? தீர்ப்புச் சட்டம். பிணைச் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் திருத்தப்பட்டவாறான 1979 ம் ஆண்டின் 15ம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவைச் சட்டத்தில் பிணை சம்பந்தமாகக் காணப்படுகின்ற ஏற்பாடுகள் ஆகியவற்றுடன் தொடர்பு படுத்தி விமர்சித்து மதிப்பிடுக.

(ii) "குற்றவியல் புலன் விசாரணை என்பது குற்றமொன்று புரியப்பட்டதெனக் குற்றஞ்சாட்டப்பட்டமை சம்பந்தமாக உண்மையை அறியும் நோக்கத்துடன் செய்யப்படுவதான சட்டப்படி ஒழுங்குமுறைப் படுத்தப் பட்டதான நடவடிக்கை என்பதோடு, அது அப்படியாகையினால் குற்றத்தினைப் புரிந்தவனின் அடையாளம், அவனது எதிர்பார்ப்பினை அறிதல், மற்றும் புலனாய்வு சம்பந்தமான பொருட்களைச் சேர்த்தல் என்பவை எதிர்கால நீதி நடவடிக்கைக்கு சான்றாக மாற்றப்படக்கூடிய தன்மை வாய்ந்தவையாகும்".

1979 ம் ஆண்டின் 15ம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவைச் சட்டத்தில் அடங்கியுள்ள குற்றவியல் புலன் விசாரணை நடாத்துதல் சம்பந்தமான சட்ட வாசகங்களின் துணை கொண்டு இக்கூற்றினை ஆராய்க.

2. இவ்வினாவில் பின்வரும் இரு பகுதிகளுக்கும் விடையளிக்க:

(i) குற்றச்சாட்டுக்கள் ஒன்றுசேர்க்கப்படுதல் சம்பந்தமான சட்டத்தில் முக்கியமாகக் கருதப்படுவதான காரணங்களை **விமர்ச்சித்து மதிப்பிடுக.**

(ii) பின்வருஞ் சந்தர்ப்பங்களில் குற்றச்சாட்டுக்கள் ஒன்றுசேர்க்கப்படுதலின் சட்டமாந் தன்மையினை ஆராய்க:

(அ) அக்குரஸ்ஸ எனும் பகுதியிலுள்ள அடிக்கடி குற்றம் புரிபவனொருவன் அதே பகுதியில் தனியாக வசிக்கும் ஐந்து பெண்களைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப் பட்டிருந்தான். அக்கொலைகள் ஐந்து அடுத்தடுத்த நாட்களில் புரியப்பட்டிருந்தது என்பதோடு அவ் ஐந்து பெண்களும் ஒருவருக்கொருவர் அறிந்தவரல்ல.

(ஆ) கமால், சுனில் மற்றும் கருணா ஆகியோர் சில்வாவின் வீட்டினுள் பலவந்தமாகப் புகுந்தனர். துப்பாக்கியொன்றை வைத்திருந்த கமால் சில்வாவைப் பயமுறுத்தியதன் பின்னர் ரூபா 200,000 இனைத் திருடினான். சில்வாவின் மனைவி ராணியின் தங்க மாலையை சுனில் பறித்தான். சில்வாவின் மகளான சுகந்தியை ஒரு அறைக்கு இழுத்துச் சென்ற கருணா அவளைக் கற்பழித்தான். மேற்குறிப்படப்பட்ட குற்றங்களுக்கு ஒரே குற்றப்பத்திரிகையில் கமால், சுனில் மற்றும் கருணா ஆகியோர் குற்றஞ் சாட்டப்பட்டனர்.

3. இவ்வினாவில் பின்வரும் பகுதிகளில் <u>ஒன்றிற்கு</u> விடையளிக்க:

(i) சான்றியல் கட்டளைச்சட்டத்தின் 14ம், 15ம் பிரிவுகளின் கீழடங்கியுள்ள நிகழ்வுகளின் இயைபுடமை (relevancy of facts) என்பதனை ஆளுகின்றதான விதிகளையும் அவற்றின் பிரயோகத்தின் போது அவை எவ்விதம் மாறுபடுகின்றன என்பதனையும் உதாரணங்கள் தந்து ஆராய்க.

(ii) "சான்றியல் சட்டமானது பிணக்குகள் நீதிமன்றத்தினால் வழக்குத்தீர்ப்பு வழங்கப் படுவதற்காக விசாரணை செய்யப்படும் போது அவை உண்மைக்கான உத்தரவாதம் கொண்டுள்ளன எனும் உத்தரவாதம் அளிப்பதான விதிகளை ஏற்பாடு செய்துள்ளது."

சான்றியல் சட்டத்தில் அடங்கியுள்ளதான சட்டக் கோட்பாடுகளின் உதவியுடன் இக் கூற்றினை ஆராய்க.

(iii) பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக:

(அ) நேரடிச் சான்றும் சூழ்நிலைச் சான்றும்

(ஆ) சூழ்நிலைச் சான்றும் கேள்விச் சான்றும்

(இ) மூலச் சான்று (சிறந்த சான்று) மற்றும் இரண்டாந்தரச் சான்று

4. இவ்வினாவில் பின்வரும் பகுதிகளில் ஒன்றிற்கு விடையளிக்க:

(i) "குற்றஞ் சாட்டப்பட்ட நபரொருவரால் அளிக்கப்பட்டதான குற்ற ஒப்புதல் பொதுவாக அனுமதித்தலின் உள்ளிடல் கோட்பாட்டினூடாகவே (inclusionary principle) அனுமதிக்கப் படுகின்றது. எனினும் குற்ற ஒப்புதலானது தவிர்த்தல் கோட்பாடு (exclusionary principle) காரணமாக குற்றவியல் நடவடிக்கைகளில் சில மட்டுப் படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் நிரூபிக்க முடியாமல் போகலாம்."

மேற்போந்த கூற்றின் வலிதுடமையையும் தவிர்த்தல் கோட்பாட்டிற்கான காரணங்களையும் பொருத்தமான நியதிச்சட்ட வாசகங்கள் மற்றும் தீர்க்கப்பட வழக்குகளின் துணையுடன் விமர்ச்சித்து பரீட்சிக்க.

(ii) குற்றமொன்றினைப் புரிந்தவனின் அடையாளம் இயைபான நிகழ்வொன்றாகும். அதனால் குற்றம் புரிந்தவனின் அடையாளத்தினைத் தீர்மானைத்தல் எந்தக் குற்றவியல் புலன் விசாரணையிலும் முக்கியமான அம்சமொன்றாகும்.

குற்றமொன்றினைப் புரிந்தவனின் அடையாளத்தைத் தீர்மானிப்பதை நோக்கமாகக் கொண்டதும் நீதி முறைமையூடாகப் புரியப்படுவதுமான குற்றவியல் புலன் விசாரணைப் படிமுறைகளை மதிப்பிடுக.

5. இவ்வினாவில் பின்வரும் பகுதிகளில் ஒன்றிற்கு விடையளிக்க:

(அ) "இலங்கையின் நீதிமன்றங்களானவை, *Rex v. Lord Cochrane* எனும் வழக்கில் கூறப்பட்ட *Allenborough* மிகைக்கூற்று என அறியப்படுவதான கோட்பாட்டினை *Woolvemington v. DPP* எனும் வழக்கில் உருவாக்கப்பட்ட கோட்பாட்டுடன் சேர்த்துப் பிரயோகிக்கின்றன."

சான்றியல் கட்டளைச் சட்டத்தின் 101ம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளதான ஒட்டுமொத்தமான எண்பிக்கும் பொறுப்பு என்பதில் மேற்குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளினால் ஏற்படுத்தப்பட்ட தாக்கத்தினை விமர்ச்சித்து மதிப்பிடுக.

(ஆ) சூழ்நிலைச்சான்று என்பதின் நீதிமுறையான மதிப்பீட்டிற்குப் பிரயோகிக்கப்படுவதான சட்டக் கோட்பாடுகளை தீர்ப்புச் சட்டத்தின் உதவியுடன் விமர்ச்சித்து ஆராய்க.

6. "பிரியாணையின்றிக் கைது செய்யப்படக் கூடிய குற்றமொன்றிற்கு (cognizable offence) சந்தேகப்படுகின்ற குற்றஞ்செய்தவனைக் கைது செய்தல் குற்றவியல் புலன்விசாரணையில் முக்கியமான அம்சமொன்றாகும்".

மேற்போந்ததன் பின்னணியில் அது புலன்விசாரணையாளருக்கு எவ்விதம் முக்கியமானதென்பதையும் அது கைது செய்யப்பட்ட நபரின் அடிப்படை உரிமைகள், பிடியாணையின்றிக் கைது செய்யப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் மற்றும் எது கைது ஆகும் என்பவற்றின் மீது செலுத்துகினற தாக்கத்தினையும் ஆராய்க.

7. லதா என்பவள் கடுங்காயங்களுடன் நெல் கதிரடிக்கும் மேடையொன்றில் விழுந்திருக்க கண்டு பிடிக்கப்பட்டாள். தர்மசேன என்பவனும் சுமதிபால என்பவனும் அவளை அணுகி, முன்னயவன் அவளிடம் என்ன நடந்ததெனக் கேட்டான். லதா " நான் கற்பழிக்கப்பட்டேன்; நான் மறுத்தபோது மோசமாகத் தாக்கப்பட்டேன்" எனும் வார்த்தைகளை முனகியவாறு கூறினாள். பின்னர் சுமதிபால யார் சூத்திரதாரியெனக் கேட்டான். தொண்டையில் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் மோசமடைந்ததன் காரணமாக அவளால் பதிலளிக்க முடியவில்லை. அதன் பின்னர் சுமதிபால, "பொனி மகத்தயா தான் இதைச் செய்தாரா?" எனக் கேட்டான். அதற்கு ஆமோதிக்கும் வகையில் தலையசைத்த லதா அதன்பின் உடனே இறந்தாள்.

சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன், லதா, பொனி மகத்தயா தன்னிடம் முறையற்ற அனுகூலம் பெற முயன்றதாகவும், தன்னைப் பாலியல் தொடர்பிற்கு அழைத்ததாகவும் அதற்குத் தான் அவமதிக்கும் வகையில் மறுப்புக் கூறியதாகவும் சுமதிபாலவிடம் கூறியிருந்தாள். லதாவைக் கொலை செய்தமை மற்றும் கற்பழித்தமைக்கு பொனி மகத்தயாவிற்கெதிராகப் பின்னர் நடத்தப்பட்ட வழக்கு விசாரணையில் இக் கூற்றுக்கள், தர்மசேனவிற்கும் சுமதிபாலவிற்கும் லதாவினால் செய்யப்பட்ட தலையசைத்தல் மற்றும் ஒரு வாரத்திற்கு முன் செய்யப்பட்ட முறையற்ற அனுகூலம் சம்பந்தமான கூற்று ஆகியவற்றை வழக்குத் தொடுக்கும் தரப்பினர் முற்போட விரும்புகின்றனர். சான்றியல் கட்டளைச் சட்டம் அவற்றின் இயைபாந் தன்மையையும்

ஏற்புடமையையும் அனுமதிக்கவில்லை எனும் அடிபடையில் அச் சான்றுகளை எதிர்த்தரப்பு கடுமையாக எதிர்க்கின்றது.

வழக்குத் தொடுக்கும் தரப்பினரின் கோரிக்கை மற்றும் எதிர்த்தரப்பின் மறுப்பு ஆகியவற்றை பொருத்தமான நியதிச்சட்ட வாசகங்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

***